10/2 9-1991 யாழ்ப்பாண

# இஸ்ரேலியர் மூலம் உயிராபத்து ஏற்படலாமென ஜனாதிபதி அச்சம்

(கொழும்பு)
தமது உயிருக்கு எந்த வேளையிலும் ஆபத்து விளைவிக்க இஸ்ரேலிய தரப்பினர் முயலக்கூடுமென ஜனாதிபதி பிரேமதாசா அச்சம் தெரிவித்துள்ளார்.
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 24 இதழ்: 210
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 9-9-1991

## விசேஷ பாதுகாப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிற்கு பலத்த பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.
தனது உயிருக்கு ஆபத்து
(3ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதிக்கு அரசு கடும் எச்சரிக்கை!

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு எதிரான பிரேரணை கொண்டுவந்த 'லலித்' குழுவினருடன் இராணுவ அதிகாரிகள் சிலர் தனிப்பட்ட முறையில் தொடர்புகொண்ட
[4-ம் பக்கம் பார்க்க]

★ தென்பகுதியில் அரசியல் திருப்பம்

# தேர்தலுக்குத் தயாராகுங்கள்

# ஜனாதிபதி 'பிரேமா' அறிவிப்பு!

## எந்நேரமும் நாடாளுமன்றத்தை கலைக்கமுடியும்!!

(கொழும்பு)
தென்பகுதியில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்பையடுத்து விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன. தற்போதுள்ள அரசியல் நெருக்கடியை சமாளிக்கும் விதமாக பொதுத்தேர்தல் நடத்தப்படவிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறும் என்பதை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும்தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் நாட்டில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தயாராகுமாறு ஜனாதிபதி பிரேமதாஸா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் பேசும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தனக்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் உத்தேசம் இல்லையென்றும், ஆனால் நாட்டின் தற்போதைய அரசியல் நிலையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி என்ற முறையில் எந்த வேளையிலும் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் நடத்த முடியும் என்றும் கூறினர்.

## மணலாறில் தொடர்ந்தும் விமானத் தாக்குதல்

(முல்லைத்தீவு)
மணலாறு மாவட்டத்திலுள்ள நித்திகைக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் நேற்று கடும் மோதல்கள் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் முன்னேறும் முயற்சிகள் தடைப்பட்டதையடுத்து மணலாறிலுள்ள ஏனைய முகாம்களிலிருந்தும் எறிகணை தாக்குதல்களை கடுமையாக படையினர்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரு வருடமாக இயங்காத பாடசாலை

[மட்டக்களப்பு]
ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் ஊர்காவல் படையினர் முகாமிட்டிருப்பதால் மேற்படி பாடசாலை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்காதிருக்கிறது. [மா]

## "அரசிற்கு எதிரான சதி முற்றுப்பெறவில்லை"

[கொழும்பு]
அரசாங்கத்திற்கு எதிரான சதி இன்னமும் முற்றுப்பெறவில்லை என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா எச்சரிக்கை விடுத்துள்ளார்

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐ. தே. கட்சியின் தேசிய நிர்வாகக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் இக்கூட்டத்தில் உரையாற்றும் போது கூறியதாவது,

"நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றி அமைப்பது அல்ல
[4ம் பக்கம் பார்க்க]

## பெண்ணும் குழந்தையும் மரணம்

(வவுனியா)
வவுனியாப் பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதத்தில் ஒரு பெண்ணும் குழந்தையும் இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது (மா)

## ஒன்பது இராணுவம் பலி

(கொழும்பு)
மன்னாரில் விடுதலைப்புலிகளுக்கும் அரச துருப்பினருக்குமிடையில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் மோதல் சம்பவங்களில் ஒன்பதுஇராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 5 படையினர் படுகாயமடைந்ததாகவும் இராணுவ
[4ம் பக்கம் பார்க்க]

## சிங்கள சந்தையாக இயங்கும் திருமலை "சூப்பர் மாக்கெற்"

[திருகோணமலை]
திருமலை நகரில் சிங்களவியாபாரிகள் தொகை அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் உதவியுடன் திருமலை நகரில் புதிய வியாபார நிலையங்களை ஆரம்பிக்கும்முயற்சியில் சிங்கள வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

'சூப்பர் மாக்கெற்' என்ற பெயரில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ள சந்தையில்
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆதரவாளர்கள் 56 பேர் தமிழகத்தில் கைது

[சென்னை]
விடுதலைப்புலிகளுக்குஆதரவு தெரிவித்து மாநாடு நடாத்த முயன்ற 56 பேர் நேற்று சென்னை புறநகர்ப்பகுதியான
(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை தமிழ் கிராமத்தில் அதிரடிப்படை முகாம்

(மட்டக்களப்பு)
அம்பாறை மாவட்டத்திலுள்ள சொறிக்கல்முனைகிராமத்தில் விசேட அதிரடிப்படையினர் புதிதாகமுகாம ஒன்றையும் அதனைச் சூழ காவல் நிலையங்களையும் அமைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இக்கிராமம் தற்போது எவருமே இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது,

இங்கு அமைந்துள்ள பழம் பெருமை வாய்ந்த திருச்
[4ம் பக்கம் பார்க்க]

## இந்திய மீனவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)
இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளுமாறு இந்தியா இலங்கைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை கடற்பரப்பினுள் செல்லும் இந்திய மீனவர்கள் மீது இராணுவ நடவடிக்கைகளுக்குப் பதிலாக சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இலங்கைக்
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த மரங்கள் சீற், முகட்டுசீற், கதவுகள், நிலை கள் 2 x 2 நெற்பிறேம் பல கைகள், மேசை, கதிரை, அலுமாரி, சோக்கேஸ், கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (சி 5279)

### தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை (Sales Girl). தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (சி 5282

### வேலைவாய்ப்பு

இலகு வழியில் வேலைவாய்ப்புடன் வெளிநாடு செல்லவிரும்பும் இரு பெண்கள் தேவை. நித்தியகல்யாணி, ஆசிரியகலாசாலை வீதி, இருபாலை கோப்பாய். [சி-5300)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

நல்லூர் தீர்த்தோற்சவத்தின்போது வடக்கு வீதியில் தங்கமோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டி கீழ்க்காணும் விலாசத்தில்பெற்றுக்கொள்ளலாம்: இ. குமாரலிங்கம், 21/3, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம்: (சி-5302

### ENGLISH

1992/93ஆம் ஆண்டுக்கான (GCE A/L) English Literatureவகுப்புகளும், (A/L) மாணவர்கள், ஆரம்ப ஆங்கில உதவி ஆசிரியர்கள், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகத் தேர்வு எழுதவிருக்கும் அலுவலர்கள் ஆகியோருக்கான General English வகுப்புகளும் நடைபெறுகின்றன. முகவரி: வ. கோவிந்தபிள்ளை. 62, பழம் றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். (சி-5303,

### திருமண சேவை

வாலிப உள்ளங்களே, பெற்றோரே ஏக்கமா, இரக்தோஷமா, விதவையா, பொருளிருந்தும் இல்லாமலும் கலங்கும்; கன்னிகளே மேல்நாடு டாக்டர், எஞ்சினியர், உத்தியோகத்தர், வியாபாரி தொழிலாளி வரை தேவையா? தேவை சொர்க்கத்தில் இறைவனால், மண்ணில் மனிதரால் நிச்சயிக்கப்படும். நித்திய கல்யாணி ஏஜன்ட், ஆசிரிய கலாசாலை வீதி, இருபாலை, கோப்பாய். (சி-5299)

### நூல்கள் கொள்வனவு

(உடுவில்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய வருடாந்த பரிசளிப்புக்கு தேவையான நூல்களை கொள்வனவு செய்வதற்கென கனடாவில் உள்ள டாக்டர் சிவகணேசமுருகமூர்த்தி ஐயாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (109)

### கண் காட்சி

(யாழ்ப்பாணம்)

வாழைநாரிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சி இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். தலைமையலுவலகத்தில் நடைபெறுகிறது


இக்கண்காட்சியினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்றுக்காலை திறந்துவைத்தார் இக்கண்காட்சியில் மலிவு விற்பனையும் இடம்பெறுகிறது. (153)

### சுயமுயற்சி கடன்

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், அங்கத்தவர்கள் பதின்மூன்று பேருக்கு தலா ரூபா ஆயிரம் மாதாந்த தவணை அடிப்படையில் சுயமுயற்சி கடன் வழங்கவுள்ளது.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை "டட்லியா"

[தேவசிகாமணி வரலெட்சுமி]

வீரஜனனம்: 22-02-1971

வீரமரணம்: 27-07-1991

எங்கள் குடும்பப்பூங்காவில் கடைக்குட்டியாக வந்துதித்த வரக்குட்டியே!
நீ எங்களை விட்டு நாட்டு மண்மீட்க நின்னுயிரைக் கொடுத்தனையோ!!
எங்கள் உயிரில் உயிராக வாழும் பொன்குஞ்சே !!!
உனதும் உன்னுடன் தம்முயிரை அர்ப்பணித்த வீரவேங்கைகளினதும் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கிறோம்.

குடும்பத்தினர்

"ரூபவாசம்"
சடையாண்டி கோவிலடி,
வல்வெட்டித்துறை. (சி-5241)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை ரிஷான்

[செல்லையா சத்தியசீலன்]

தாயின் மடியில்: 1970-10-10

தாயக மண்ணில்: 1990-09-05

திதி: 09-09-1991

[05-09-90 ஆம் திகதி யாழ். கோட்டை இராணுவ முகாமில் நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்]

அன்பின் திருவுருவே! எங்கள் சத்தி! எம்மைப் பிரிந்து தாயகமண்ணை மீட்கச் சென்றாயே. கோட்டை மண்ணில் கொடி பறக்க உன்னையே கொடுத்தாயே. சத்தி உன் வண்ண முகம் பாராமல் வாடுகின்றோம். சத்தி உன் அன்பு மொழி கேட்காமல் அலைகின்றோம். ரிஷான் எம்மைப் பிரிந்தாய், ஓராண்டு ஓடிமறைந்தாலும் இன்னும் எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்திடினும் ரிஷான் உன் நினைவுகள் என்றும் எம் உள்ளத்தில் ஒளிர்ந்துகொண்டேயிருக்கும். உன் நினைவுகள் தாயக மண்ணில் ஒளிர்ந்துகொண்டேயிருக்கும்.

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

மாதகல்,
நாவலர் வீதி,
மாதகல். [சி-5291]

## பதவி வெற்றிடம்

(மானிப்பாய்)

இலங்கைப் பாராளுமன்றத்தின் செயலாளர் குழுவின் கன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 16ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

## கூட்டம்

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபையின் விஷேட ஆட்சிக்குழுக் கூட்டம் நாளை 10ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு பாஷையூர் பாலர் பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு: செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும். [154]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### 2-வது லெப். சங்கர்

[வாரி ஜெயந்திரன்]
[துதி]

வீரஜனனம்: 12-06-1971

வீரமரணம்: 27-07-1991

திதி: 09-09-1991

"அடிமைத் தளத்திலிருந்து மண்ணை மீட்க
ஆயுதம் ஏந்தினாய்
அதனால்
விடுதலைக்கே வித்தானாய்"

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

(27-07-1991 இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளையும் நினைவுகூருகின்றோம்)

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

நாவற்குழிச் சந்தி,
கைதடி. [சி-5292]

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### அமரர் கார்த்திகேசு ஞானம்மா

வண்ணார்பண்ணையில் மலர்ந்தது: 20-11-1917

லண்டனில் உதிர்ந்தது: 9-9-1990

அன்பிற்கு ஓர் அம்மா, பண்பிற்கு ஓர் அம்மா.
பஞ்சபாண்டவர்போல் வளர்த்தாயே
கண்ணீர்க் கடலில் தவிக்கவிட்டு எங்கு சென்றாய்?
சிவலோக யாத்திரையில் சாந்திபெற
கண்ணீர் சிந்தி நிற்கும்
பாசமிகு பிள்ளைகள்.

மருமகன்: சிவநேசன்,
மகள்: மீனலோஜினி,
பேரப்பிள்ளைகள்.
(கனடா).

மகன்மார்:
ஜெகன்மோகன் குடும்பம் (லண்டன்),
லோகேசன் குடும்பம் (ஜேர்மனி),
நகுலேசன் குடும்பம் (கொழும்பு),
சிவநேசன் குடும்பம் (லண்டன்).

(சி-5294)

## கனிமொழி குறவள்ளி மகிழ்வோனே! குகனே!

ராகம் - காபி தாளம் - ஆதி

பல்லவி

நுதல்விழி வழியாக உதித்தவனே - எங்கள்
நுதல்விழிச் சிவனாரின் திருமகனே - குகனே!
.........(நுதல்.........)

அனுபல்லவி

தனிமொழி தமிழாளும் நல்லையிலே - பேசும்
கனிமொழி குறவள்ளி மகிழ்வோனே - முருகா
.........(நுதல்......)

சரணம்

தமிழரெம் துயரொன்றும் காணேயா - வாடும்
தமிழினத் துயர்போக்க வாராயோ - ஈழத்
தமிழரெம் நலம்காக்க மாட்டாயோ - தேடும்
தமிழர்க்கு அருள்கூட்ட மாட்டாயோ - குமரா!
.........(நுதல்......)

- முருகு

## பாதுகாப்பற்ற நிலையினால் தொழில் பயிற்சி பாதிப்பு

[யாழ்ப்பாணம்]
"யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் பாதுகாப்பற்ற நிலையினால் ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை போன்ற சில பகுதிகளில் தொழிற்பயிற்சி நெறிகளை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டுக்கென ஒதுக்கப்பட்ட 12 பயிற்சி நெறிகளில் ஆறு பயிற்சிகள் இவ்வாறு தடைப்பட்டுள்ளன."

இவ்வாறு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஆதரவுடன் யோகசுவாமி சமாதி மண்டபத்தின் ஒரு பிரிவில் தையல் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய உதவித் தொழில் ஆணையாளர் திரு. கே. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

மேற்படி சனசமூகத் தலைவர் திரு. எஸ். சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் 30 யுவதிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர். தொழில் திணைக்கள உத்தியோகத்தர் திரு. ஆ. பசுபதி, கொழும்புத்துறை இந்து வித்தியாலய அதிபர் திரு. க. கணேசநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (123)

## மரம் நடுகை வாரம்

[கொழும்புத்துறை]
இலங்கை மத்தியசூழல் பாதுகாப்பு அதிகார சபையால் நாடுபூராகவும் தேசிய மரம் நடுகை வாரமாக இம்மாதம் 17ம் திகதியிலிருந்து 23ம் திகதிவரையான ஒருவார காலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. [154)

## குளம் புனரமைப்பு

[பண்டத்தரிப்பு]
பண்டத்தரிப்பு தவிட்டைக் குளம் விரைவில் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது இதற்கான அங்கீகாரம் யாழ். செயலகத்திலிருந்து கிடைத்துள்ளது. (72)

## கருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)
யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டு வகுப்பில் 'வரலாறு' கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது

மேற்படி பாடத்தைக் கற்பிக்கின்ற சகல ஆசிரியர்களையும் தவறாது இக்கருத்தரங்கிற்குச் சமுகமளிக்குமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கல்விப் பிரிவுப்பொறுப்பாளர் திரு. அருண்மாஸ்ரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (139]

## இன்று

(யாழ்ப்பாணம்)
வகுப்பு ஆண்டு ஆறுக்கான வரலாறு பாடநூல் வெளியீட்டு விழா யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இன்று 9-ம் திகதி 9 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் (வேலணை கோட்டம்) சி புலேந்திரன் தலைமையில் நடைபெறும்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி சி. க. சிற்றம்பலம், யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் வழங்க, யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா நூலை வெளியிட்டு வைப்பார். (152)

## மன்னார்தீவு இருள்மயம் போக்குவரத்தும் பாதிப்பு

(மானிப்பாய்)
எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் தீவு இரவில் இருள்மயமாக காட்சியளிப்பதாகவும் போக்குவரத்துச் சேவையும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் மண்ணெண்ணைக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக வீடுகளில் இரவு வேளையில் விளக்குகள் எரிவதில்லை. சில இடங்களில் மட்டும் ஒருலீற்றர் மண்ணெண்ணை 125 ரூபாவாக விற்கப்படுகின்றது. அத்துடன் தற்பொழுது மன்னாரிலிருந்து தலைமன்னார் வரை ஒரேயொரு பஸ்சேவை மாத்திரம் நடைபெறுகின்றது.

பஸ்சேவைக்குரிய டீசல் எண்ணையை அன்றாடம் மன்னார் இராணுவத்திடமிருந்து பெற வேண்டியிருப்பதனால் பஸ் சேவையும் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் எண்ணை தட்டுப்பாடு காரணமாக கருவாடு சிப்பங்களை தாழ்வுபாட்டிலிருந்து கல்பிட்டிக்கு புறப்படும் படகுகளில் ஏற்றிவர முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [71]

## விசேஷ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்படலாமென ஜனாதிபதி அச்சமடைந்திருப்பதைத் தொடர்ந்தே அவருக்குவிசேட பாதுகாப்பு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதிசெயலகம் உட்பட அவரது வீடு மற்றும் அவர் கலந்து கொள்ளும் பொது வைபவங்கள் போன்றவற்றிலும் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவேயுள்ள அவரது மெய்க்காப்பாளர்களோடு மேலும் பலர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## கம்பியூட்டர் கல்வி

- DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE.
- d BASE 111+
- LOTUS 1-2-3,
- WORD PROCESSING
- MS-DOS
- Advanced Programming in BASIC and d BASE III+

ஆரம்பம்:

09-09-91 (திங்கள், புதன், வெள்ளி [வகுப்புக்கள்]

14 09-91 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

ஜெனரேற்றர் மூலம் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு:-

**UNIKCO COMPUTER CENTRE**

37, Clock Tower Road, Jaffna.
(வெலிங்டன சந்திக்கு வடக்கு பக்கமாக உள்ள மேல்மாடி)

(ஏ 1575)


## உலர் உணவு நிவாரணம்: அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)
அகதி முகாம்களுக்கு வெளியே வாழ்கின்ற அகதிகள் தமக்குரிய உலர் உணவு நிவாரணப் பொருட்கள் கிடைக்காதுவிட்டால் புனர்வாழ்வு அமைச்சுக்குத் தெரிவிக்குமாறு புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் கிறிஸ்டி சில்வா அறிவித்துள்ளார்:

இதுவரை நிவாரணப் பொருட்களையோ அன்றி நிதியோ கிடைக்கப்பெறாதவர்கள் உடனடியாக அமைச்சுக்கு அறிவிக்குமாறுகேட்கப்பட்டுள்ளனர். (71)

## வலிகாமம் பகுதியில் பனம் பழத்திற்கு மவுசு

[பண்டத்தரிப்பு]
வலிகாமம் - மேற்கில் பனம் பழத்திற்கு இம்முறை என்றுமில்லாதவாறு "மவுசு" ஏற்பட்டுள்ளது

பல வீடுகளில் உடுபிடவைகளைச் சுத்தப்படுத்துவதற்குப் பனம் பழத்தையே அதிகம் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. மேலும் பல மக்களும் பனம் பழத்தை உணவாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

பண்டத்தரிப்புச் சந்தை, சங்கானைச் சந்தைகளில் பனம் பழம் ஒன்று 3 ரூபா தொடக்கம் 5 ரூபா வரை விற்கப்படுகின்றது. [72]

## அனலைதீவுப் பகுதி பொதுசன உதவிப் பணம்

[மானிப்பாய்]
அனலைதீவில் கடந்த ஐந்து மாதங்களாக வழங்கப்படாமல் இருந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரினால் அப்பகுதித் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பணம் கடந்த பெப்ரவரி முதல் யூன் மாதம் வரை வழங்கப்படாமல் இருந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அங்குள்ள தபாலகங்களுக்குச் சென்று இவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென அவ்வலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். [71]

## மருந்து தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]
சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து, பி. சி. ஜி. எனப்படும் கயரோகத்தடுப்பு ஊசி மருந்து ஆகிய முக்கிய தடுப்பு மருந்து வகைகள் கடந்த இரு வார காலமாகக் கையிருப்பில் இல்லை.

இதனால் சிறுவர் நல கிளினிக்குகளுக்கு வரும் தாய்மார்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லுகின்றனர். [72]

## இராசி பலன்

09 - 09 - 1991
திங்கட்கிழமை
தமிழுக்கு ஆவணி 24

பிரதமை பி. ப. 3-40வரை உத்தரம் பி. இ. 2-05 வரை, இராகுகாலம் காலை 7-33 முதல் 9-03வரை, சுபநேரம் நண்பகல் 12-03 முதல் 1-33 வரை, சித்தயோகம்.

மேடம்: கௌரவம், தொழில் மேன்மை, பணவரவு.

இடபம்: எதிர்பாராத துன்பம், கூடாநட்பு, அலைச்சல்.

மிதுனம்: வாக்குக் கலகம், குறைகேட்டல், தொழில் பாதிப்பு.

கடகம்: தற்பெருமை, தொழில் வெற்றி, கடமையுணர்வு.

சிங்கம்: கருத்து வேறுபாடு, தொழில் நஸ்டம், வெறுப்பு.

கன்னி: எதிர்பாராத உதவி, வெற்றிக் களிப்பு, காரியச் சித்தி

துலாம்: அநாவசியச்செலவு, நண்பர்பகை, பணமுடை.

விருச்சிகம்: வஸ்திரலாபம், கடன் வசூல், நன்மதிப்பு.

தனுசு: குடும்ப மகிழ்ச்சி, தொழில் லாபம், புத்திரர் பெருமை.

மகரம்; தொழில் கஸ்டம், பகைவர் தொல்லை, பதட்டம்.

கும்பம்: சிறுவிபத்து, குடும்பப் பிரிவு, யோசனை மிகுதி.

மீனம்: அறிஞர் சந்திப்பு, தொழில் பாராட்டு, மன நிறைவு.

ஜோஸ்யர்

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நடராசா ஜெகதீஸ்வரன்
(ஜெகன், நிசாம்) சங்கரத்தை

தோற்றம்: 20 - 02 - 1961
மறைவு: 09 - 09 - 1984

இவ்வண்ணம்,
இந்து வாலிபர் சங்கம்,
சங்கரத்தை

(சி-5304)

★ ஜனாதிபதிக்கு எதிரான

# முன்னறிவிப்பு பிரேரணையை சபாநாயகர் நிராகரிக்கலாம்!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை முன்னறிவிப்பு செல்லுபடியற்றதென சபாநாயகர் நிராகரிக்கமுடியுமென்று அரசியல் அமைப்புச் சட்ட நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

ஜனாதிபதி பிரேமதாசா மீது அரசியல் குற்றம் சுமத்தும் பிரேரணை முன்னறிவித்தல் சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் இட்டதாகக் கூறப்படும் கையொப்பங்கள் போலியாகவோ அல்லது ஏமாற்று தவறான வழிநடத்தலின் மூலமோ பெறப்பட்டதென நிரூபிக்கப்பட்டால் இப்பிரேரணை முன்னறிவிப்பை செல்லுபடியற்றதென சபாநாயகர் கணிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கில் வங்கிக் கடன்கள் நிறுத்தம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் திட்டக் கடன் தவிர்ந்த ஏனைய வங்கிக் கடன்களை வழங்க வேண்டாமென்று வங்கிகளின் தலைமையகம் பணிப்புரைவிடுத்துள்ளது.

வீடமைப்புக்கடன், வியாபாரக் கடன் மேலதிகப்பற்று என்பனவற்றை வழங்கக்கூடாதென்று வங்கி நிர்வாகம் பணித்துள்ளது. (மா)

## அம்பாறை கச்சேரியில் தமிழ் மொழி புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ் மொழியை கட்டாயமாக அமுலாக்க வேண்டிய அம்பாறை கச்சேரி தனிச் சிங்களத்தை தொடர்ந்தும் அமுல்நடத்திவருகிறது.

வீடுகள் இழந்தோருக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று, ஆலையடி வேம்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழ் மக்களுக்கு விநியோகம் செய்துள்ள கடன் விண்ணப்பங்கள் தனிச்சிங்களத்தில் இருப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமத்தையும் இடர்பாடுகளையும் எதிர்நோக்குகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [153]

## நாளை கண்டனக் கூட்டம்

[கொழும்பு]

ஐ. தே. கட்சியிலிருந்து விலக்கப்பட்ட திரு. லலித் அத்துலத் முதலி, திரு காமினி திஸாநாயக்கா குழுவினரின் கண்டனக்கூட்டம் நாளைசெவ்வாய்க்கிழமை நுகேகொடையில் நடைபெறவிருக்கிறது. (மா)

### சிங்கள சந்தையாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுக்க முழுக்க சிங்கள வியாபாரிகளே வியாபாரம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று புதிதாகத் திறக்கப்படும் வர்த்தக நிலையங்கள் யாவும் சிங்களவர்களுக்கே சொந்தமானதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலுவை தேவாலயமும் பல மாதங்களாக பாழடைந்து கிடக்கிறது.

சொறிக்கல்முனை கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும்நோக்கிலேயே அதிரடிப்படை முகாம் அமைக்கப்பட்டு வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. [மா]

### இந்திய மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான இந்தியத் தூதுவர் நரேந்திரநாத் ஜா இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நான்கு இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்ததையடுத்தே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இந்திய அரசு முழுமையான அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுவருவதாகவும் மிக விரைவில் இவ்வறிக்கை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கோரப்படுமெனவும் திரு. நாகேந்திரநாத் ஜா மேலும் தெரிவித்துள்ளார்.

## தியாகி திலீபன் தடகள விழா

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி வட்டவை மட்டத்தில் நடைபெறும் தியாகி தீலீபன் நினைவு தடகள விழா முன்னர் அறிவித்தது போல் செம்பியன் பற்று மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறுது. அம்பன் அமெரிக்கன்மிஷன் பாடசாலை மைதானத்தில் 12 09 91, 13.09.91 ஆகிய தினங்களில் நடைபெறும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

★ ★

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் நடத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழா - 1991. விழாவில் யாழ்.மாவட்டரீதியான இறுதி நிகழ்ச்சிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் 22 09 91, 23 09 91 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. வட்டவை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களைப்பெற்றவர்களேமாவட்ட ரீதியான போட்டியில் பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுக் கொள்வார்கள்.

### இராணுவத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க அரசாங்கத்தின் உயர்பீடத்தால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இராணுவ அதிகாரிகளை நடுநிலைமை வகிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சம்பந்தப்பட்ட வி. யக்கலை இராணுவத்தினர் தங்களுக்குள் விவாதிக்க வேண்டாமென்றும் இராணுவ தளபதிக்கு மேலும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினரால் அதன் பணிமனையில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கண்காட்சியின் இறுதி நாளான இன்று நடைபெறும் பூர்த்தி விழாவில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுகிறார். வாழை, பனை, மனையியல் பொருட்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த முகமத் (சிவஞானம் சுபாகரன், விநாயகபுரம், அம்பாறை), குட்டி (லிங்கராஜா ரவிச்சந்திரன், தனங்கிளப்பு, சாவகச்சேரி), வசந்தா (ஜெயவதனி சண்முகநாதன், நாவலர் வீதி, மாதகல்) ஆகியவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## பரீட்சை முடிவுகள்

[மட்டுநகர்]

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற க. பொ. த. [உயர்தர] விஷேட பரீட்சை முடிவுகள் இம்மாதம் 15-ம் திகதி வெளியிடப்படும்.

இப்பரீட்சைக்கு தமிழ் மொழிமூலம் 16 ஆயிரம் மாணவர்கள் தோற்றினார்கள்.

### அரசிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்து அதன் மூலம் தாங்கள் பதவிக்கு வருவதே எனக்கு எதிராக அரசியல் குற்ற பிரேரணை கொண்டு வந்தவர்களின் நோக்கமாகும்' என்றார்.

### இஸ்ரேலியர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அண்மையில் ஐ. தே. கட்சியின் 45வது வருடாந்த விழாவில் உரையாற்றியபோதே ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இஸ்ரேல் நாட்டிற்கு தூதரக அந்தஸ்து வழங்க தாம் மறுத்துள்ளதாகவும், இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை இலங்கையில் மூடிவிட தாம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து தம்மை அழிக்க எவ்வளவு பணத்தையும் செலவளிக்க இஸ்ரேல் மொஸாட் அமைப்பினர் முயற்சி செய்வதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

தாம் அழிக்கப்பட்டாலும் ஜனநாயக மரபுகளைப் பேண ஐ. தே. கட்சி தொடர்ந்து பாடுபட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். [க]

வவுனியா செல்லும்

# வியாபாரிகளுக்கு பயண அனுமதி

(யாழ்ப்பாணம்)

பயணிகளுக்கான அனுமதி அட்டையைப்பெற்று வவுனியாவில் வியாபார நோக்கிற்காகச் செல்லும் மக்களுக்காகாகிய பிரயாண அனுமதி பற்றி தமிழீழ விடுதலைப்புலிகள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பின்வருமாறு தெரிவித்துள்ளது.

1. ஒருமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாரம் இருமுறை மாத்திரம் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படும்.

2. வவுனியா, மன்னார், மாவட்ட மக்கள் ஞாயிறும், புதனும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்கள் செவ்வாய், வியாழனும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மக்கள் திங்கள், சனி ஆகிய நாட்களில் மாத்திரம் செல்ல முடியும்.

3. மாதத்தில் வருகின்ற ஒவ்வொரு வெள்ளியும் மேலே கூறப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு ஒரு முறை என்ற வரிசைப்படி கொடுக்கப்படும்.

(அ) இக்கிழமைகளில் மேலதிகமாக இடமிருப்பின் மாத்திரம் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் போகமுடியும்.

4. ஆண்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.

5. தவிர்க்க முடியாத காரணங்களால் [ஊரடங்குச் சட்ட காலங்கள்] ஒரு நாள் இரு நாள் போக முடியாத நிலையேற்பட்டால் அவர்கள் ஒரு மாவட்டத்துக்கு ஒருநாள் வீதம் போகவேண்டிய மாவட்டங்களோடு இணைத்துப்போக அனுமதிக்கப்படும்.

இம்முறை 15-ம் திகதியில் இருந்து நடைமுறைக்குவரும்.

## புதியகாரியாலயம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டத்தைச்சேர்ந்தோர் விதிவிலக்கின் அடிப்படையில் வடபகுதிக்கு வெளியேசெல்ல அனுமதிபெற விரும்புவோர்களுக்காக கோண்டாவில் மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் 10-9-91 முதல் புதிதாக ஒரு காரியாலயம் திறக்கப்படவுள்ளது. இக்காரியாலயத்தில் வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதி பெறுவதில் ஏற்படும் பிரச்சனையைத் தீர்க்க தனிப் பிரிவு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தொடர்பு கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதி பெறுவது சம்பந்தமான பிரச்சனைகள், துஷ்பிரயோகங்கள் என்பன பற்றிய தகவல் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி கீழே தரப்பட்டுள்ளது. இவை பற்றி எம்மிடம் தொடர்பு கொள்வோர் உங்கள் பெயர் முகவரியையும் சேர்த்து எழுதவும். (இவை ரகசியமாக வைத்துக் கொள்ளப்படும்). பொறுப்பாளர், போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், தபால் பெட்டி இலக்கம்-1180, யாழ்ப்பாணம், தமிழீழம்.

### புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அம்பத்தூரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் சங்கத்தின் தலைவர் திரு. சக்தவத்சலம் தலைமையில் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் ஊர்வலம் நடாத்தியபோதே மேற்படி 56 பேரும் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

### ஒன்பது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர் அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; மன்னார் வீதியால் இராணுவ ட்ரக்கில்ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் நிலக்கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொண்டதில் 5 இராணுவத்தினர் பலியாகினர்

மற்றொரு சம்பவமொன்றில் ரோந்து சென்ற படையினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 5 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (க)

### மணலாறில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடாத்தி வருகிறார்கள்.

சிறிலங்கா விமானப்படையின் விமானங்களும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்திவருகின்றன.

குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர்கள், அவ்ரோ, வை-12 போன்ற விமானங்கள் மணலாறு மக்கள் குடியிருப்புகள்மீதும்காடுகள்மீதும் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

பெருமளவு வீடுகள் இதன் காரணமாக தரைமட்டமாகியுள்ளன. காடுகள் பல தீக்கிரையாகியுள்ளன. (மா)

## சிவராசன், சுபா பிடிபட கம்பியூட்டர்கள் உதவின

(பெங்களூர்)

ராஜீவ்காந்திகொலைதொடர்பாக சிவராஜனையும் சுபாவையும் கண்டுபிடிப்பதில் சூப்பர் கம்பியூட்டர்கள் பெரும்பங்கு வகித்திருப்பதாக சி. பி. ஐ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கம்பியூட்டர்கள் கொல்லிமலையில பொருத்தப்பட்டதால் அதிகசக்திவாய்ந்த வயலெர்ஸ் கருவிமூலம் பேசப்படும் சங்கேத வார்த்தைகளை கம்பியூட்டர் பதிவு செய்ததுடன் எத்தனையாவது கிலோமீட்டரில் எந்த திசையில் இருந்துபேசப்படுவதையும் குற்றப் புலனாய்வுத்துறைக்கு தகவல் கொடுத்தது

இதன் அடிப்படையில்தான் பெங்களூர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்து அவர்கள் பெங்களூர் ஜெயநகரை அடுத்துள்ள கனகபுர வீதியில் 20 மைல் தொலைவிலுள்ள சவுக்கு மரங்கள் நிறைந்த பிராண்டி "பற்றறிக்கு" பிற்புறத்தில் உள்ள வீட்டை முற்றுகையிட முடிந்ததாகக் கூறினர். (எஸ்)

## கெடுபிடி

[கொழும்பு]

மலையகத்தில் பொலிஸாரின் கெடுபிடி அதிகரித்து வருவதால் அங்குள்ள பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இங்குள்ள வீடுகளுக்கு திடீரென வரும் பொலிஸார்கள் சோதனை என்ற பெயரில் பொதுமக்களை துன்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

முக்கிய வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வாகனங்கள் யாவும் கடுமையாக சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதிகளில் சந்தேகத்திற்கிடமானவர்கள் கைதுசெய்யப்பட்டு நீண்ட நாட்களாக தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுவருகிறார்கள்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice S.I Lanka under Licence Number B/10336/81.